சார்பு நீதிமன்றம், துறையூர்.
OS.No.99/2022

தேதி: 07.12.2023
பெயர் : செந்தில்வடிவு (வா.சா.1) க/பெ:தமிழ்செல்வன்

**<u>குறுக்குவிசாரணை</u>**

வழக்கு சொத்து மாரிமுத்துவில் பூர்வீக சொத்து, அதில் பாகம் கேட்டு வந்துள்ளேன் என்றால் ஆமாம். மாரிமுத்துவுக்கு மாரியாயி, பழனியாண்டி, முத்துசாமி வாரிசுகள் என்றால் ஆமாம். மாரியாயி என்ற நபர் இவ்வழக்கில் மறைத்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. மாரியாயி இறந்துபோய்விட்டார் என்றால் அவர் யார் என்றே தெரியாது. மாரியாயிக்கு முத்துசாமி, ஆண்டி, கமலா என்ற 3 குழந்தைகள் உண்டு என்றால் ஆண்டி மட்டும் தெரியும். ஆண்டிக்கு கமலஹாசன், மல்லிகா, கௌசல்யா, கலையரசன் என்ற வாரிசுகள் உள்ளது பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மாரியாயி என்பவர் மாரிமுத்துவின் முதல் குழந்தை என்றும், அதை மறைத்து வழக்கு போட்டது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. தமிழ்செல்வன் 10 பவுன் நகையை வங்கியில் அடமானம் வைத்துள்ளார். தமிழ்செல்வனுக்காக தான் பாகம் கேட்டு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். 2005 ல் தமிழ்செல்வனை கல்யாணம் செய்த பிறகு தான் இந்த விவரம் தெரியும் என்றால் ஆமாம். பழனியாண்டிக்கும் முத்துசாமிக்கும் தனித்தனி கதவு கொண்ட வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் ஒரே வீடு தான் இரண்டு கதவுகள். என் வீட்டின் கதவு எண்.165/2. பழனியாண்டி வீட்டுக்கு மாற்றவில்லை என்றால் மாற்றவில்லை. மின்சாரத்தை பொறுத் இன்று வரை மாரிமுத்து பெயரில் தான் உள்ளது. பூர்வீக சொத்துகள் வாங்கியதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் போடவில்லை என்றால் சரிதான். பழனியாண்டி 3 ம் பிரதிவாதி சாந்திக்கு எழுதி கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு போடும் போது பழனியாண்டி சாந்திக்கு எழுதி கொடுத்த விவரம் தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம். அந்த கிரைய பத்திரத்தில் என்ன இருக்கிறது என்று தெரியாது. அந்த ஆவணம் 09.07.2010 ல் ஏற்பட்டதாக உள்ளது என்றால் ஆமாம். 13 ஆண்டுகள் பிறகு அந்த ஆவணம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், இது காலதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னாலும் சரியல்ல. வா.சா.ஆ.14 16.08.2010 ல் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் ஆமாம். அது 95,000/−த்திற்கு எழுதப்பட்டதாக காணப்படுகிறது என்றால் ஆமாம்.

இந்த ஆவணமும் 13 ஆண்டுகள் கழித்து செல்லாது என பரிகாரம் கேட்பதால் கால தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னாலும் சரியல்ல. நான் 2005 ல் தான் வழக்கு வீட்டில் குடிபுகுந்தேன் என்றால் ஆமாம். ஆனால் 2003 லேயே எனது கணவருக்கு பழனியாண்டி விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். நான் வழக்கில் பல விஷயங்களை மறைத்துவிட்டு தூய கரங்களுடன் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/

(ஒம்/–எம்.ஜெய்சங்கர்)
உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி,
துறையூர்.